ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

आशां विहाय परिहृत्य परस्य निन्दां
पापे रतिं च विनिवार्य मनस्समाधौ ।
आदाय हृत्कमलमध्यगतं परेशं
वाराणसीपुरपतिं भज विश्वनाथम् ॥

சாஸ்திரவிரோதமாய் ஒருபொருளை நாம் அடையவேண்டுமென்கிற விருப்பத்தைவிட்டு, பிறரிடமிருக்கும் குணங்களை விலக்கிவிட்டு தோஷங்களைக்கூறி நிந்தை செய்யாமலும் சாஸ்திரங்களாலும் ஸாதுக்களாலும் செய்யக் கூடாதென்று நிஷேதிக்கப்படும் பாபகர்மாக்களை அனுஷ்டிக்கமுயலாமலும் மனதைக் கண்டவிடங்களிலெல்லாம் அதுபோகும் வழியில் விடாமல் ஸ்வாதீனமாகச்செய்துகொண்டு ஸர்வேசுவராயும் வாராணஸீ என்கிற காசிமாநகருக்கு அதிபதியாயும் விளங்கும் ஸ்ரீ விசுவநாதரை ஹிருதயகமலத்தின் மத்தியில் வீற்றிருக்கும்படி செய்து எப்பொழுதும் தியானிக்கவேண்டும்.

அறிவில்லாமல் உலக வாழ்க்கையையே பெரிய புருஷார்த்தமாய்க் கொண்ட மூடர்களைப்போல் விஷப சுகங்களில் ஆஸ்தையையும் பரநிந்தையில் பிரியத்தையும் எப்பொழுதும் பாபகர்மங்களில் இச்சையையும் அடைந்து இப்பிறவியைப் பயனற்றதாய் செய்து கொள்ளாமல் எவ்வித சுகத்திற்கும்முக்கியகாரணமான மனத்தை வெளியில்விடாமல்உள்ளேநிறுத்திக்கொண்டு अनन्याश्चिन्तयन्तो मां இதர விஷபங்களிலுள்ள பற்றுதலை அறவேயொழித்து என்னையே எப்பொழும் எவர்கள் சிந்திக்கிறார்களோ அவர்களுடைய ஸகல காரியங்களையும் நான் வஹிக்கிறேன் என்கிற ஸ்ரீ பகவானுடையகருத்திற்கிணங்க சர்வேசுவரரான ஸ்ரீ விசுவநாதரை நாம் ஆராதித்தோமானால் ஸகல சிரேயஸ்ஸையும் பெறலாமாகையால் அவ்விதம் ஆராதிக்கவேண்டுமென்று கருணாநிதியான ஒரு மஹான் அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

# ஸ்ரீ தப்ரபக்த சரிதம்.

மஹாசிவராத்திரி புண்யகாலத்தில்
அத்வைதஸபா பண்டிதரான பிர்மஸ்ரீ
யக்ஞஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட
உபன்யாசத்தின் சுருக்கம்.

(கஙு-வது பக்கத்தொடர்ச்சி.)

ஸாத்வியான அந்த அம்மாளும் பக்திச்சிரத்தையுடன் வந்து வினவுங்கால் தப்ரபக்தர் அவளைப் பலவாருகப்போற்றி முடிவில் "ஹே, கருணுவதி, ஹே, கல்யாணி, உன்னுடைய பிரஸாதத்தால் தான் எனது விரதம் நடைபெறவேண்டும். அக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு வீராஸனத்தில் வீற்றிருக்கும் சங்கரபக்தரான அம்மஹான் இங்கு வருவதற்கு உனது அபிப்பிராயத்தை எதிர்பார்க்கிருர். நந்தனவனமானது கல்பலதையால் அலங்கரிக்கப்பட்டிருப்பதுபோல எனது ஸ்தானமானது உன்னுல் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. எவனுக்குக் கிருகத்தில் களத்திரம் அனுகூலமாயில்லையோ அவன் அரண்யத்தைச் சரண்யமாக அடைவது நலமென்று புராணுதிகளில் சான்ருேர்கள் சாற்றுகின்ருர்கள். எவ்வித சிரமம் நேர்ந்தாலும் ஒன்றையும் பொருட்டாகக் கருதாமல் அதிதியை ஆராதிக்க வேண்டியது முக்கியம்.

दृष्टादृष्टानि भाग्यानि नश्वराण्येव पश्यतः ।
प्रायः कलत्रं पुत्रं च पशवः सर्वसंपदः ॥

நமக்கேற்படும் பாக்கியங்கள் எல்லாம் அற்பகாலம் காணப்படும்; பிறகு மறைந்துவிடும். ஆகையால் அவையாவும் நிலையற்றவை. உலகில் பெரும்பாலும் பத்னி, புத்திரன், பசு மற்றுமுள்ள ஐசு

வரியங்கள் இவைகள் அதிதிகளால் யாசிக்கப்பட்டால் அவர்களுக்கு அவற்றை அர்ப்பணம் செய்துவிட வேண்டும். அவ்விதம் செய்யாவிடில் அவை தாமாகவே நாசத்தை யடைந்துவிடும்.

विषया न परित्यक्ता स्वयं पुंसां गता यदि ।
शोकशूलं हृदि न्यस्य गच्छन्त्येव पतिव्रते ।
सुधिया चेत् स्वयं त्यक्ता दद्युस्सौख्यमनन्तकम् ॥

ஹே பதிவிருதே! விவேகமில்லாத ஜனங்கள் நச்வரமான விஷயங்களில் அதிகப் பற்றுதலை வைத்துக்கொண்டு மரிக்கும்பொழுதும் அவைகளாலேற்படும் துக்கத்துடனேயே மரிக்கிறார்கள். வித்வானால் விலக்கப்பட்ட விஷயங்கள் அவனுக்கு அளவிறந்த சுகத்தைக் கொடுக்கின்றன.

शिबिर्वपुःस्वं श्येनाय कपोतत्राणतत्परः ।
अलर्कोऽदात् द्विजो नेत्रे व्याधायाङ्गं कपोतकः ।
तिर्यञ्चोऽप्यतिथेः पूजामात्मनापि वितन्वते ।
अथ माहेश्वरे प्राप्ते किमदेयं भवेन्मम ॥

சிபி என்கிற சக்கரவர்த்தி புறாவைப் பாதுகாப்பதின் பொருட்டுத் தமது சரீரத்தை சியேனமென்கிற பறவைக்கு அளித்தார். அலர்க்கர் என்கிற ஒரு துவிஜர் தம்முடைய நேத்திரங்களைக் கொடுத்திருக்கிறார். ஒரு புறா தனது சரீரத்தை வேடனுக்கு உணவாக அர்ப்பணம் செய்திருக்கிறது: பக்ஷிகள்கூடத் தம்முடைய சரீரங்களால் அதிதிகளுக்குப் பூஜை செய்கின்றன. இக்காலம் மஹேசுவரபக்தர் வந்திருக்கும்பொழுது எதைத்தான் அவருக்குக் கொடுக்கக்கூடாது" என்றார்.

இவ்விதம் பர்த்தாவால் போதிக்கப்பட்ட சுவேதவனநாயிகை எனப் பெயர்பூண்ட அவருடை இல்லாள்மந்தஹாஸத்தோடுகூட தனது பிராணநாதனை அடிபணிந்து அஞ்சலிபந்தம் செய்துகொண்டு செப்புகின்றாள். ஹே ஸ்வாமிந், இப்பொழுது தங்களால் சொல்லப்பட்ட ஸம்போதனங்களெல்லாம் அபூர்வமாயிருக்கின்றன. தங்களுடைய சாதுர்யமான வாக்கு என்னுடைய காதுகளில் கத்தி முனையால் வெட்டுவதுபோல் விழுகின்றது. என்னிடம் ஏதாகிலும் தவறு இருந்தால் ஏன் சிக்ஷிக்கக்கூடாது?

செய்யவேண்டியகாரியத்தைச் சீக்கிரமாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். அதைச் செய்ய நான் மறுத்தால் உடைந்த மண் பாண்டத்தைப்போல் என்னைத் தூரத்தில் விலக்கிவிடுகிறது" என்று கூறினாள். இவ்வசனத்தைக் கேட்ட தப்ரபக்தன் சந்தோஷமடைந்து பரமேசுவர பக்தரால் சொல்லப்பட்ட விஷயத்தை அவளிடம் சொன்னார். இடிவிழுதலுக்குச் சமமான அக்ஷரங்களையுடைய அவர் கூறிய வசனத்தைக் கேட்ட ஸாதுவான அந்த ஸ்திரீயும் அற்பம்கூட மனத்தில் கலக்கம் கொள்ளாமல் "குழந்தையை இங்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று பதியிடம் தெரிவித்தாள். உடனே தப்ரபக்தரும் ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு பையன் படிக்கும் வித்தியாசாலைக்கு ஏகினார். அங்கு,

मध्येस्थितं श्रीपतिमर्भकाणां निधिं कलानामिव तारकाणाम् ।
उमापतेःस्तोत्रशतं पठन्तं तत्रात्मजं भक्तवरो ददर्श ॥

நக்ஷத்திரங்களுடைய மத்தியில் சந்திரன்போல் பல பிள்ளைகளுக்குமத்தியில் விளங்குகிறவனும் உமாபதியினுடைய ஸ்தோத்திரங்களைப் படிப்பவனும் தமது புத்திரனுமான ஸ்ரீபதியைப் பக்தச் சிரேஷ்டரான தப்ரபக்தர் பார்த்தார். தன் பிதாவைக் கண்டவுடன் ஸந்தோஷத்தினால் ஸ்ரீபதி கம்பீரத்த்வனியுடன்

उपास्य एकोऽधिपतिः पशूनां समर्चनीयाश्च तदीयभक्ताः ।
प्रीतश्शिवो भक्तसपर्यया स्यात् शिवप्रसादेन शुचं तरन्ति ॥

'ஸகலப்பிராணிகளுக்கும் அதிபதியான பசுபதி ஒருவரே உபாஸிக்கத் தகுந்தவர். அவருடைய பக்தர்கள் பூஜிக்கத் தகுந்தவர்கள். பக்தர்களைப் பூஜிப்பதால் சிவன் திருப்தி யடைந்தவராக ஆகிறார், திருப்தியடைந்த அவருடைய பிரஸாதத்தால் சகல துக்கங்களையும் விலக்கி விடுகிறார்கள்' என்று படித்தான். தமது குமாரனால் படிக்கப்பட்டசுலோகத்தின் கருத்தைச் செவியிற் கொண்ட தப்ரபக்தர் அளவிலா ஆனந்தத்தை யடைந்து பாலகனைக் கிருஹத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அவனது குருவினிடம் அறிவித்தார். உடனே அவர் பையனைப் பிதாவுடன் செல்லும்படி ஆக்ஞாபித்தார். (தொடரும்)

உபபத்திராதிபர்.

# தருமம்.

உலகங்களில் ஒரே தலைவராகிய கடவுளுக்கு மக்களாவார்
மீளா அடிமைகள் ஆவார். தமக்குத் திருத்தொண்டு செய்து
பிழைக்கும் பொருட்டே ஆண்டவனால் இந்த அருமையாகிய
உடம்பு அளிக்கப்பட்டது. மனிதர்களிடத்திலுள்ள பொருள்க
ளெல்லாம் கடவுள் கொடுததனவே.

கடவுள் எதன் பொருட்டுப் பொருளைக்கொடுத்தருளினார்.
தாமும் உண்டு பிறரையும் உண்பித்து இம்மை மறுமைப் பயன்
களை எய்தும் பொருட்டே ஒருவருக்குக் கடவுள் பொருளைக்
கொடுத்தருளியது. இங்ஙனமாக ஒருவன் இதற்கு மாறாக நடக்
கலாகுமா? ஓர் ஊழியன் தன்னிடத்தே இருக்கும் தனது
தலைவனது பொருளை அந்தத் தலைவனது கருத்துக்குப் பொருந்
திய வழிகளில் அல்லவா செலவுசெய்தல் வேண்டும்? அஃ
தன்றோ அந்தத் தலைவனை மகிழச் செய்வது? அங்ஙனம் செய்
யாமல் அவனது கருத்துக்கு மாறாகத் தனக்கு உதவும் எனச்
சேமித்து வைத்துக்கொள்ளலாமா? அல்லது தனது இச்சை
யின் படியே செலவு செய்துகொள்ளலாமா? அவை தன்னலம்
பாராட்டும் தீச்செயலும், நம்பிக்கைமோசமும ஆக அன்றோ
முடியும்? உலோபகுணமாகவும் ஆகுமே. அத்தலைவனது தண்
டனையையும் அடைவிக்குமே?

உண்ணவும், உடுக்கவும், நிற்கவும், இருக்கவும் வழியின்றி
வருந்துகின்ற எளிய மாந்தர்கள் எண்ணிறந்தவராக நம்மைச் சுற்
றிலும் இருக்கின்றனரே அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க
உடையும், நிற்க நிழலும் இருக்க இடமும் கொடுத்து உதவவே
ண்டியது; செல்வத்தைப் படைத்தவர் செயலன்றோ? அங்ங
னம் செய்யாது தாங்கள் மாத்திரம் நல்ல வீடுகளிலே வாசம்பண்
ணல், நல்ல அறுசுவைகளோடுகூடிய உணவுகளை உண்ணல், அழ
கிய பருத்தி, பட்டு இவற்றாலாகிய ஆடைகளை உடுத்துக்கொள்
ளல் முதலிய இன்பங்களை அனுபவித்து அவர்களை மறத்தல்
கூடுமா? வருமானத்தில் நான்கில் ஒரு பாகத்தைத் தருமத்திற்
குச் செலவு செய்தல் நீதியாகும், இது சொற்ப வருமானத்தை

உடையவர்களால் கூடாதாயினும், அவரும் இயன்ற அளவு தருமத்தைச் செய்தாகவேண்டும் என்பது நியாயமாகும்.

வேலைசெய்து உண்டு, உடுத்து உயிர்வாழச் சக்தியற்றவர்களுக்கும், குருடர், முடவர் முதலிய அங்கஹீனர்களுக்கும் போதிய உதவிகளைச்செய்து உதவ வேண்டியது பொருளாளர்களது கடமையாகும். உழைத்து உயிர்வாழச் சக்தியுள்ளவர்களுக்கும் அநாதப்பிள்ளைகளுக்கும், கல்வியையும், கைத்தொழில்களையும் கற்பித்து வளர்த்து வரல்வேண்டும்.

'இவற்றைச்செய்வதற்கு அதிகம் பொருள் வேண்டியிருக்கலாமே. என்னுல் அவ்வளவையும் கொடுத்து உதவ இயலவில்லையே சிறிது தானே கொடுக்க இயலும். அச்சிறியதைக்கொடுத்தும் நிறைவேருதே' என்று எண்ணி எவனும் சும்மா இருத்தலாகாது. ஒவ்வொருவரும் சிறிது சிறிதாகவேனும் இயன்ற அளவு கொடுத்தே ஆகவேண்டும். முதல் வீட்டிலே நுழைந்தபொழுது பிச்சைக்காரனது பாத்திரம் வெற்றுப்பாத்திரமாகவே இருக்கும் அந்தப்பாத்திரம் அந்தப்பிச்சைக்காரன் கடை வீட்டில் நுழைந்து திரும்புங்கால் நிரம்பியிருக்கும். அஃது எங்ஙனம் நிறம்பியது? ஒவ்வொரு வீட்டாரும் சிறிது சிறிதாக அந்தப் பாத்திரத்திலே இட்ட பிச்சை அரிசியால் அல்லவோ நிறம்பியது. ஒரு வீட்டுக்காரும் போடாமல் இருந்துவிட்டால் நிரம்புமா? நிரம்பாதன்றே? அங்ஙனமேதான் இந்தத் தருமத்தின் பயனும் நிரம்பும். யாருக்கும் உண்ணும்போது ஒருபிடிசோறும் எளிதேயாம். 'சோறிடநாடும்-துணிதரக் குப்பையும் உண்டு' என்றும் உக்தியார்.

தனது வருமானத்திலே காற்பாகத்தைத் தருமத்தின் பொருட்டுச் செலவுசெய்ய ஒருவன் விரும்புகிறுன். ஆனுல், அவனது நிலைமை அதற்கு இடந்தாவில்லை. அரைவீசம், கால்வீசம் அரைக்கால்வீசம், என்ற எவ்வளவு சிறிய அளவிலேனும் அவன் தனது பொருளைத் தருமத்திலே செய்து வருவானுயின் அஃது அவனுக்கு ஒருகாலத்திலே தருமப்பயனை முழுதும் நிறைத்துவிடும். இங்ஙனமே பலர் தங்களால் இயன்ற அளவு சிறிது சிறிதாகக்கொடுத்து உதவினுல் அந்தத்தொகை 'பலதுளி பெருவெள்ளம்' என்றபடி பெருகிப் பெரிய பெரிய தருமகாரியங்களையும்

செய்து முடித்ததற்குத் துணைசெய்வதாகும். நாட்டிலுள்ள கலாசாலை, வைத்தியசாலை, வாசகசாலை, புத்தகசாலை முதலியன பல இம்முறையில் தோன்றியனவே.

இங்கே கூறியவற்றை உணர்ந்து தருமச்செயலை மேற்கொண்டவர் முதலிலே தங்களுடைய சுற்றத்தார்களைக் காப்பற்றல் வேண்டும். "சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்" என்பதும் "செல்வர்க்கழகு செழுங்கிளைத் தாங்குதல்" என்பதும் நீதிமொழிகளல்லவா ? செய்யுங்கால் ஏதும் பதில் உதவியை எதிர்பார்த்துச் செய்தலாகாது. அஃது ஒருவருக்கொருவர் செய்துகொளளும் பயன் கருதிச்செய்யும் செயலேயாகும்; உதவியாக மாட்டாது.

'தாம் செய்யும் தருமச்செயல் பிறர் பலரால் அறியப்படல் வேண்டும்' என்று எண்ணுவது அறிவுடையோர் செய்யும் செயலாகாது. அஃது ஆடம்பரச் செயலாகவே முடியும். அன்றியும் அத்தகை தருமம் என்றும் நின்று நடைபெறுது. 'தாம் செய்வது தமது மற்றொரு கைக்கும் தெரிதல் கூடாது' என்று கருதிச் செய்பவரே உத்தம தருமவான் ஆவார். அன்னர் 'தம்மால் தருமமாகச் செய்யப்பட்ட பொருளே தம்முடைய பொருளாவது. தாம் உண்டனவும், சேர்த்துவைத்துள்ளனவும் தம்முடையன ஆகா' என்ற உண்மையை நன்ருய் உணர்ந்தவர் ஆவர். அவரே இப்பொருளை நாம்பிறக்கும்பொழுதே கொண்டுவாவில்லை. அதனை இறக்கும்பொழுதும் கொண்டுபோக இயலாது. காதற்ற ஊசியும் கடைவழிக்கு வாராது. இப்பொருள் இடைநடுவிலே கடவுளால் தந்தருளப்பட்டது. இப்பொருளுக்கு நாம் சொந்தக்காரர் என்பது பெயர் மாத்திரமே. இது சிவன் தந்ததாதலின் நாம் தருமகர்த்தரே. ஆதலின், இப்பொருளைப் பிறர்க்கும் கொடுத்து மகிழ்வுறல் வேண்டும். இஃதொன்றே பொருள்படைத்ததின் 'பயனாவது' என்று எண்ணிப் பிறர் பொருட்டுத் தருமம் பண்ணி இருபெரும் பேறுகளையும் எய்தற்குரியவர் ஆவர்.

தருமம் முப்பத்திரண்டு வகையாகக் கூறப்படும். அவற்றுள் சில இந்தக்காலத்திற்கு வேண்டாதவாகக் கருதப்படும், புதிதாகச் சில தருமச்செயல்கள் காலத்திற்கேற்பச் சேர்க்கவும் பட

லாம். அறிவுடையோரால் எவை எவை தருமச் செயல்கள் என்று கூறப்படுகின்றனவோ அவையிற்றை உள்ளன்போடு செய்பவரே தருமசீலர் ஆவர். அங்ஙனம் செய்யாதவர் உலோபியே ஆவர். தாமும் அனுபவித்துப்பிறருக்கும் உதவாதவர் தேனீக்குச் சமமாவர். தேனீ எப்படிப் பல பூக்களிலிருந்தும் தேனைகொணர்ந்து சேர்த்துத்தானுண்ணாது அழிந்து விடுகின்றதோ அப்படியே உலோபிகளும் பொருளிருந்தாலும் இழந்தவரே ஆவர். பணத்தைப் பாடுபட்டுத்தேடிப் புதைத்துவைப்பவர் கேடுகெட்டவரே. ஆதலின் 'தருமமே வெற்றியைத் தருவது. தருமமே இன்பத்தை அளிப்பது. தருமமே அன்பைவளர்ப்பது. தருமமே அருளைக்கொடுப்பது' என்ற இந்த உண்மைகளை உணர்ந்து இயல்வதுகரவாமல் அறஞ்செய விரும்பிச் செய்து இன்புற்று வாழ்வதே மாந்தரது கடமையாம்.

தண்டமிழ்த்தொண்டர்.

---

# ஆஸ்திகர்களின் கடமை.

நேயர்காள்!

ஸநாதந தர்மங்களுக்கு அபமிருத்யுப் போன்ற பல ஸமாஜங்கள் இக்கலிமஹாராஜனின் கொடும் செங்கோன்முறையில், புதிது புதிதாகத் தோன்றிப் பிழைத்துத்தழைத்து வருகின்றன. அவைகளைப் பின்பற்றிய விளம்பரங்களும், வியாஸங்களும், மறைகளை மறைக்கின்றன. அறநெறியை யழிக்கின்றன. சாஸ்திரங்களைச் சீறுகின்றன. வர்ணாச்ரமங்களுக்கு வசைமொழி கூறுகின்றன. நாஸ்திக தர்மத்தை நிமிர்த்துகின்றன. ஆனாலும் நம்மனோரில் பெரும்பாலோர் முன்னோர் செய்த தவப்பயனால் அவைகளுட் புகுராமல் தத்தளிக்கும் ஸமயத்தில் அன்பும் அருளுமுருவாய்ந்த ஆசிரியர் சிலர் நம்முன்னோர்களின் தவச்சக்தியால் இவ்வுலகிற் தோன்றி ஸநாதந தர்மத்தைப் புகட்டுவதும், நாஸ்திகதர்மத்தைப் பஹிஷ்கரிப்பதும், வேதங்களை வளர்ப்பதும், வர்ணாசிரம தர்மங்களை வாழ்த்துவதுமான பல அரியபெரிய வியாஸங்களால் தாய்

மொழியில், எளிய நடையில் இவ்வாரியதர்மம்போன்ற பத்திரிகைகளை நம் மனத்தடுமாற்ற மறவே பிரசுரிக்கக் கிளம்பியுள்ளார். பிறருதவியை முன்னிட்டு நடத்துமிக் காரியத்தில் இயன்றஅளவு திரவியத்தாலும், வாக்கினாலும் உதவிசெய்யக் கடமைப் பட்டிருக்கின்றோம். நமதுதவி பெற்றவாசிரியர்களும் வாரப் பிரசுரத்தையும்முறையாக்கவும் கிரமமாக தினப்பதிப்பாக்கவும் முயலுவார்கள். அங்ஙனம் வரவர நாம் முன்னேறி விளங்குவோம். கலியை வெல்லுவோம். ஜகதாசாச்சாரியன் கருணைக்கு விஷயமாவோம். முன்னோர்களின் தர்மத்தைக் கையாளுவோம் என்பதில் கிஞ்சிற்றுமையமின்று. ஆதலால் இப்பத்திரிகை போன்ற நம்மத விஷயங்கள் வரைகின்ற பத்திரிகைகளை ஆதரிக்க இன்னும் தீவ்விரமான முயற்சியைக் கையாளக் கடவுள் அருள்புரிவாராக.

தர்மமும் நகரமும் என்ற தலையங்கத்துடன் ஆரியதர்மத்தில் மறுமுறையில் வெளியிடுவதை நேயர்கள் கடைக்கணிக்கவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

K. R. விசுவநாத சாஸ்திரி,
கானாடுகாத்தான்.

---

# வரதக்ஷிணை ஒழியாதா?

விவாஹம் ப்ராம்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்யம், ஆசுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசமென எட்டாக வகுக்கப்பட்டுள்ளது. தற்சமயம் பாரதநாட்டில் எங்கும் பிராமணர்களுக்குள் விசேஷமாக ஆசுரவிவாஹமே நடக்கிறது. சாபத்தினால் நமக்கு அஸுராம்சம்வந்ததோவென எண்ணம்திருடமாகிறது. பெண்ணைப்பெற்றோரிடமிருந்துபணம்பரிப்பதே ஆசுரமாகும். இதற்கு முதற்காரணம் ஆங்கிலக்கல்வியே. நேராகவும் பரம்பரையாகவும் இக்கொடிய வழக்கத்தை இது வளர்த்தது. ஆங்கிலங் கற்றவனை அரசாங்க உத்யோகத்திற்கு (ஊழியத்திற்கு) அழைக்கின்றனர் என்றெண்ணம் பரவியது. ஆங்கிலக்கல்விக்குப் பரீக்ஷை தேருவதே ஸாலோக்கிய முக்தியாம். முறையே அங்நாகரீகத்தையடைந்து உத்யோகத்தைபெற்றால் ஸாமீப்ய ஸாரூப்ய ஸாயுஜ்ய

முக்தியும் பெற்றதுபோல். ஆதலால் மோக்ஷத்திற்கேற்க காயக்லேசாதிகள் செய்யாமல் முடியுமா? பரீக்ஷைக்குப்படித்து கண்கெட்டு உடம்பு மெலிந்து பலங்குன்றி விவாஹமாவதற்குள் அரைகிழத்தனம் வந்து விடுகிறது. ஸ்வதர்மாசரணமின்மையால் பாதிபௌருஷத்தை இழக்கிருன். ஸ்திரீகளின் சக்தியே மேலிட்டிருப்பதால் ஸ்திரீப்ரஜைகளே அதிகம் பிறக்கின்றன. ஆகவே கன்யகையை சாஸ்திரப்படி தேடுவதற்குப் பதிலாக பிள்ளை தந்தையோர் ஏலங் கூறுகின்றனர். இதற்கு நிதர்சனமாக பெண்குறைவாகவுள்ள நம்மவரிலேயே சிலபிரிவினர்கள் கன்யகையைத்தேடிப்பணங்கொடுப்பதைகண்கூடாகக்காணலாம்

உத்யோகஆசையால் உள்ளபொருளையும் விற்றுபடிக்கவைக்கும் நம்மவர் இனிகண் விழிக்காமலிருக்கமுடியாது. பையனுக்கு உத்யோகம் கிடைப்பதாயிருந்தாலல்லவோ அவனைப்படிக்கவைத்தசெலவனைத்தையும் வட்டியுடன் கன்யாபிதா கக்கவேண்டும். இனி ப்ராம்மணர் இவ்வழிவரக்கூடாதெனவேவாயிட்டு காருண்ய அரசாங்கம் தடுத்துவிட்டது.

यद्यदाचरति श्रेष्ठः तत्तदेवेतरो जनः ।

எதைப்பெரியார் செய்கிருரோ அதை ஏனையோர் செய்வாரென்பதை நல்வழிக்குஉபயோகப் படுத்தாது தீயவழிக்கு எடுத்துக்கொண்டு தனிகரைப்பார்த்து ஏழைகளும் கெடுகின்றனர். படித்தும் பணமுள்ள வரனுக்கு அதிக விலை கொடுக்கும் அறியாமைக்கென் செய்வது? ஏழையைத்தேடி அப்பணக்துடன் கன்யகையை தக்ஷிணையாகக் கொடுத்தால் இரண்டு குடும்பமும் இம்மைமறுமைச் சுகத்தைப்பெறும். தனிகரே! இச்சமயம் முன் வந்து வழிகாட்டவேண்டும். இத்தீயை வளரவிட்டால் ருதுவானபிறகு விவாஹம்செய்தால் இது தீரும் என்றெண்ணி எந்தமேதாவி பேறும் இனி ருதுவான பிறகே விவாஹம் செய்யவேண்டும். முன்னே செய்தால் இன்னசிக்ஷை எனச்சட்டம் செய்ய தீக்ஷை செய்துகொள்வர். ஆதலால் ஆங்கிலம் கற்றோரும் தனிகர்களும் ஒன்று சேர்ந்து இப்பெரிய தர்மத்திலீடுபடும்படிப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவசர்மா.

# ஸ்ரீ கிருஷ்ணனின் ஆயுஷ்காலம்.

ஆரியோத்தமர்களே! இங்கு நான் எடுத்துக்கொள்ளப் போகும் விஷயம் இக்காலத்தினரின் மார்க்கத்தைத் தொடர்ந்ததேயொழிய நம் முன்னோர்கள் வழியைப் பின்பற்றியல்ல. கிருஷ்ணனின் ஆயுஷ்காலத்தை யாராயப்போகிறேன். இதுநம் ஆஸ்திகசிகாமணிகட்குமிகவும் குறைவைத்தருவதாகும். ஏனெனில் நம்முன்னோர்கள் எப்போதும்ஸாமான்ய விஷயத்தைக்குறித்துக்கூட ஆயுஷ்பரிமாணத்தையறிய ஒருபோதும்முன்வரமாட்டார்கள். அஃது எப்போது இருந்தாலென்ன? எப்போது இறந்தாலென்ன? இருக்குமளவில் இதனால்நமக்கு நன்மைதீமையாவை? இதற்கும் நமக்குமுள்ளஸம்பந்தம்யாது? அத்தகைய ஸம்பந்தத்தை இனியும்வளர்ப்பதா? தறிப்பதா?என்று இம்முறைகளில் தான் சர்ச்சை செய்வார்கள்.

पुराणमित्येव न साधु सर्वं न चापि काव्यं नवमित्यवद्यम् ।
सन्तः परीक्ष्यान्यतरद्भजन्ते मूढः परप्रत्ययनेयबुद्धिः ॥

ஆதல்பற்றியே காளிதாஸன் பழமை என்று சொன்னதனால் எல்லாப் பழமையும் நல்லதுதானென்றும் புதிது என்றதனால் எல்லாக்காவியமும் கெடுதல்தானென்றுமெண்ணிவிடக்கூடாது. ஸாதுக்களான பெரியோர்கள் விஷயத்தை மட்டிலும் கவனித்து ஏதாவதொன்றைக் கைப்பற்றுவார்கள், மூடன் பிறரது புத்தியினால் கெட்ட புத்தியுள்ளவனாவான் என்றார். இதனால் காளிதாஸரது காலத்திற்கு முன் பிராசீனக் கிரந்தங்களில் நம்பிக்கை உண்டென்றும் ஆதல்பற்றியே அக்காலத்திலிருந்தோரும்பிற்காலத்திலுதித்தோரும் தமதுபாண்டித்யத்தைத்யோ யோக்கியதையையோ வெளியிடவேண்டுமென்றால் முன்னோர்களது கிரந்தங்களுக்கு வ்யாக்கியானம்செய்வதையே கைக்கொண்டனரென்றும்தெரிகிறது. ஆதலால்தான்புதிதாய் எழுதும் தமது கிரந்தங்களை ஒருவருமாதரியார் என்றபயத்தால் காளிதாஸர் அவ்விதம் கூறினரென்றும் கூறுகின்றனர். ஆகவே நம் முன்னோர்களின் வழியாதெனில் ஸன்மார்க்கமான முன்னோர் வழியையே பின்தொடர்வது தான். அப்படி இருக்க இப்போது கிருஷ்ணனின் ஆயுஷ்கால விசாரணை மிக அசாஸ்திரியமே. யாயினும் இக்காலத்திய நவீனமார்க்கத்தை இவ்விஷயத்தில் மட்டும்

கையாண்டால் தீங்குயாது மில்லையென்றதனுல் மட்டிலுமீதிவி றங்குகிறேன். பெரியோர்கள் பொறுத்து மன்னிப்பீர்களாக. இதையறிவதால்யாது நமக்குப் பயனெனின் விசேஷபுண்யமுண் டென்று சொல்வதற்கில்லையாயினும் ஒருவாறு கிருஷ்ணனிடத் தில் பக்தி உதிப்பதற்கு இதுவும் ஏதுவாகலாமோவென்றும் நினை க்கிறேன். ஏனெனில் ஸ்ரீ கிருஷ்ணனின் ஆயுஷ்காலத்தை நிச்ச யப்படுத்துவதற்கு முன்னுல் அவரது அவதாரகாலத்தையும் கூற வேண்டியது அவசியமாதல்பற்றி அவ்விஷயத்தை ஆராயப்புகும் போது அவரது மகிமையே வெளிப்படுமாகையால் இதுவும் ஒரு பக்திக்கு ஏதுதான்.

ஆனுல் இக்காலத்திய நூல்கள் போல் நம் முன்னோர்களால் இயற்றப்பட்டகிரந்தங்களிலோ இதிஹாஸ புராணங்களிலோ பர மாத்மா பூபாரத்தைக்குறைத்துச் சாது ஸம்ரக்ஷணம் செய்ய அவதரித்தனரென்று மட்டிலும் சொல்லியிருப்பதைத் தவிர ஸ்பஷ்டமாய் இன்னவருடம் மாதம் தேதியிலவதரித்தனரென்று ஸர்வஸாமான்ய ஜனங்களும் எளிதிலறியுமாறு தெரிவிக்காவிடி னும் ஆங்காங்கு அவதார வர்ணனைகளிலுள்ள கிருகநிலைகளைக் கொண்டு ஜோதிட நிபுணர்களாலும் ஸூக்ஷ்ம புத்தியுள்ளவர்க ளாலும் பகவானுடைய அவதாரம் ஒருவாறு நிச்சயிக்கப்பட்டு வருகிறது. அவ்விதமே இங்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் அவதாரப் பெருமையைக் கொண்டாடும் பாகவதம் முதலிய கிரந்தங்களின் மூலமாய்ப் பகவானின் அவதாரகாலத்தை ஒருவாறு காணலாம். ஸ்ரீமத்பாகவதம் பத்தாவதுஸ்கந்தம் மூன்ருவது அத்தியாயத் தில் ஸ்ரீ கிருஷ்ணுவதாரகாலத்தைச் சொல்லுமிடத்து

अथ सर्वगुणोपेतः कालः परमशोभनः ।
यर्ह्येवाजनजन्मर्क्षं शान्तर्क्षग्रहतारकम् ॥
मन्दं मन्दं जलधरा जगर्जुरनुसागरम् ।
निशीथे तम उद्भूते जायमाने जनार्दने ॥

'நக்ஷத்திரம் கிருஹங்கள் சாந்தமாயிருக்க ஸ்ரீ கிருஷ்ணன் அவத ரிக்கும்போது நள்ளிருளில் ஸமஸ்தகுணங்களோடு கூடியபரம மங்களமானகாலத்தில் ரோகிணீ நக்ஷத்திரத்தில் ஸமுத்திரக்கரை யோரத்தில் மேகங்கள் மெள்ளமெள்ள இடித்தன' என்றிருக்கி

றது. இந்த சுலோகங்களால் பகவானது நக்ஷத்திரம் ரோகிணி என்றும், உண்டானகாலம் இரவு என்றுமட்டிலும் வெளியாயிற்று. ஸ்ரீ ராமன் அவதரித்த காலத்தில் ராமாயணத்தில் கிருஹநிலையும் மாதம், திதி நக்ஷத்திரம் முதலிய வேளைகள் எவ்வளவு தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விதம் இங்குக் கூறப்படவில்லை. ஆனால் ஸ்ரீ ராமாவதாரத்தைக் காட்டிலும் விசேஷமான பாகம் மட்டிலும் ஸ்ரீமத்பாகவதத்தில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது அதாவது.

तमद्भुतं बालकमम्बुजेक्षणं चतुर्भुजं शंखगदाद्युदायुधम् ।
श्रीवत्सलक्ष्मं गलशोभिकौस्तुभं पीताम्बरं सान्द्रपयोदसौभगम् ॥
महार्हवैडूर्यकिरीटकुण्डलत्विषा परिष्वक्तसहस्रकुन्तलम् ।
उद्दामकांच्यङ्गदकङ्कणादिभिर्विरोचमानं वसुदेव ऐक्षत ॥

தாமரைக்கண்ணனையும்நான்குகைகளில்பிரகாசிக்கின்ற சங்கம்கதா முதலிய சிரேஷ்ட ஆயுதங்களோடும் மார்பில் ஸ்ரீவத்ஸமென்னும் அடையாளமும் கௌஸ்துபாபரணமும் இடையில்பீதாம்பரமும் நீருண்டமேகம்போன்ற காந்தியும் விலையுயர்ந்த வைடூரியமிழைத்த கிரீடகுண்டலங்களும் அழகியகூந்தலும் அரைநாண் தோள் வளைகாப்புக்களும் என்றசிலவற்றோடும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஆச்சரியமான அக்குழவியை வஸுதேவர் கண்டார் என்று. இதனால் ஸ்ரீமன் நாராயணனே யான் என்பதை அவ்வடிவமாய்க் காண்பித்தார். ஸ்ரீராமன் லோகரீதியாய்த் தானவதரித்தார். இதிருக்கட்டும். இனிஇவரது அவதாரகாலத்தைஇன்னுமாராய்வோம். விஷ்ணுபுராணம் 5வது அம்சம் 1வது அத்தியாயத்தில் யோகமாயையை நோக்கி விஷ்ணு சொல்லுகிறார்:—

ततोऽहं संभविष्यामि देवकीजठरे शुभे ।
गर्भे त्वया यशोदायां गन्तव्यमविलम्बितम् ॥
प्रावृट्काले च नभसि कृष्णाष्टम्यामहं निशि ।
उत्पत्स्यामि नवम्यां च प्रसूतिं त्वमवाप्स्यसि ॥

அதனால் நான் மங்களமான தேவகியம்மணியின் வயிற்றில் ஜனிக்கப்புகுகிறேன். நீயும் தாமதம் செய்யாது யசோதையம்மாளின் கர்ப்பத்தில் நுழை, மழைக்காலமான சிராவணமாதத்தில் கிருஷ்

ஷ்டமியன்று இரவில் நான் பிறக்கிறேன். நீ நவமி தினம் பிறப்பையடைவாயாக. என்று இவ்விருசுலோகங்களாலும் வருஷாகால சிராவணமாதம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் இரவில் ஜனித்தார் என்று தான் ஏற்படுகிறது. ஹரிவம்சம் பூர்வபாகத்தில் 25 வது அத்தியாயத்தில் யோகமாயையை நோக்கி ஸ்ரீமந்நாராயணன் கூறுவது:—நான்நடுநிசியில் கர்ப்பத்தை விட்டுச்சுகமாய் 8வது மாதத்திலேயே வெளியேறுகின்றேன். நான் அப்போது யசோதையை அடைகின்றேன். நீ தேவகிதேவியை அடைந்துவிடு. நாமிருவரும் கர்ப்பத்தை மாற்றுவதில் கம்ஸன் மயக்கமடைந்திருப்பான் என்றார். பிறகு 53வது அத்தியாயத்தில் எந்தத்தினத்தில் தேவதேவனைக்கர்ப்பத்தில் தேவகிஅடைந்தாளோ அதேதினத்தில் விஷ்ணுவின் சரீரத்தில் உண்டாகி விஷ்ணுவின் ஆக்ஞைப்படி நடக்கும் நித்திரையென்ற யோகமாயையை யசோதையும் கர்ப்பத்தில் தரித்தாள். கர்ப்பமாஸம் நிறையாமலிருக்கும்போது 8வதுமாதத்தில் தேவகியும் யசோதையும் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி சிராவண மாதத்தில் நடு நிசியில் ஸமமாகவே பெற்றார்கள் என்கிறார். அப்போது சந்திரன் உதயத்திற்குத் தயாராய் இருந்தார். அச்சமயந்தான் தேவகி விஷ்ணுவையும் யசோதை அந்த கன்னியையும் பெற்றனர். அப்போது அபிஜித் என்ற முகூர்த்தம்என்றும் சொன்னார். பிறகு அதே அத்யாயத்தினிறுதியில் அப்போது வஸுதேவர் தேவகியின் கர்ப்பகிருகத்தில் நுழைந்துதாமரை இலையில் வடபத்திரசாயீ என்பதைக் காட்டுவதுபோல் கிழக்கில் தலையும் மேற்கில் காலுமாகச் சயனித்திருக்கும் பகவானைத் தரிசித்தனர் என்கிறார். இவ்விதம் பாகவதம் விஷ்ணுபுராணம், ஹரிவம்சம் முதலியவைகளால்ருது மாஸம், திதி, நக்ஷத்திரம் ராத்திரிவேளை இவைகள் ஸ்பஷ்டமாய் வெளியானதுடன் பகவானது ஜனன முகூர்த்தம் அபிஜித்என்பதும் தேவகி யசோதைகளிடத்தில் ஸ்ரீ பகவானும் அவரது யோகமாயையும் ஏக காலத்தில் பிரவேசித்தனவென்றும் இருவரும் 8வது மாதத்தில் ஒரேகாலத்தில் அவதரித்தனரென்றும் தெளிவாயிற்று. அவதாரவருடம் வெளியாகவில்லை. இருக்கட்டும், இனி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா பூலோகத்தில் எத்தனை வருடங்கள் மானிட சரீரத்தோடு பிரகாசித்தனர் என்பதைக்கவனிப்

பாம். பாகவதம் 11வது ஸ்கந்தம் 6வது அத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் பிர்மா முதலிய தேவர்கள் கூறுதல்:—

यदुवंशेऽवतीर्णस्य भवतः पुरुषोत्तम ।
शरच्छतं व्यतीयाय पञ्चविंशाधिकं विभो ॥

புருஷோத்தமரே! யதுவம்சத்தில் அவதரித்த தங்களுக்குப் பிரபுவே 125 வருஷங்கள் ஆயின என்று பிர்மாவானவர் பகவானை வைகுண்டத்திற்கெழுந்தருளப் பிரார்த்திக்கும் போது சொன்னார். இம்மாதிரியே விஷ்ணுபுராணத்திலும் கூறியிருக்கிறது. அங்கு இந்திரனாலனுப்பப்பட்ட தூதன் ஒருவன் கிருஷ்ணனிடம் வந்து,பிரபுவே வஸுக்கள் அசுவினி தேவர்கள் மருத்துக்கள் ஆதித்யர்கள் ருத்திரர்கள் சாத்யர்கள் இவர்களாறபுடைசூழ இந்திரன் இவ்வாறு விக்ஞாபனம் செய்து கொள்கின்றனர். அதைச்சற்று கேட்பீராக. அயோக்கியர்களாய் பூமியின்பாரமாய்நின்ற அஸுரர்கள் உம்மால் கொல்லப்பட்டனர். பூபாரம் ஒருவாறு நீங்கிற்று. இனி மறுபடியும் ஸ்வர்க்கலோகத்திலுள்ள எங்களைப் பாதுகாப்பதற்காகச் சௌகர்யப்பட்டால் ஸ்வர்க்கத்திற்கு எழுந்தருள வேண்டும். இப்போது தாங்கள் பூமிக்குப் போய் 125 வருஷங்கள் ஆய்விட்டன. என்று 5வது அம்சம் 37வது அத்தியாயத்திலும் பாகவதம்போலவே கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரியே மாறுதல் இல்லாமல் ஹரிவம்சத்திலுமுளது. வைகுண்டநாதன் ஸ்ரீ ராமபிரானாய் அவதரித்து 11000 வருடம் பூமியிலிருந்ததாகவும் கடைசியில் யமன் நேராகவந்து தாங்கள் வைகுண்டமேகலாமென்று சொன்னதாகவும் உத்தரராமாயணம் கூறுகிறது. இங்கு ஸ்ரீ கிருஷ்ணன் 125 வருடங்கள் தான் இருந்தனரென்றும் கடைசியில் இந்திரதூதன் வந்தழைத்ததாகவும் வெளியாகிறது. இதன் விசேஷம் இங்குவிவரிக்க வேண்டியதில்லை.

இனி, பகவான் 125 வயதில் இவ்வுலகைவிட்டாரென்றமட்டில் நமக்குப் போதாது. அந்தக்காலம் எது என்பதற்கு இன்னும்தெளிவான பிரமாணமிருக்கிறதாவென்பதைக் கவனிப்பாம். கவதம் பத்தாவது ஸ்கந்தம் 7வது அத்தியாயத்தில்:-

समुद्रस्सप्तमेऽन्ह्येनां पुरीं संप्लावयिष्यति ।
यर्ह्येवायं मया त्यक्तो लोकोऽयं नष्टमङ्गलः ॥
भविष्यत्यचिरात्साधो कलिनापि निराकृतः ॥

இந்தத்துவாரகை என்னும் பட்டணத்தை இன்றைக்கு ஏழாவது நாளில் ஸமுத்திரம் சாப்பிட்டுவிடும். என்றைக்கு இவ்வுலகைநான் விடுவேனோ அன்றுதொட்டு இந்த லோகத்திற்கு மங்களங்கிடைக்காது. உடனே கூடியசீக்கிரத்தில் கலியும் பிரவேசித்துவிடுவான் என்று பகவான் உத்தவரிடம் கூறினர். இதனுல் பிர்மாதி தேவர்களின் பிரார்த்தனைக்குப்பிறகு ஏழாவது நாளில் துவாரகா நகரம் ஸமுத்திரத்தில் முழுகிப்போகுமென்றும் உடனே நானும் இவ்வுலகை விட்டுவிடுவேனென்றும் அப்போதே கலிப்ரவேசம் ஆய்விடுமென்றும் ஸ்பஷ்டமாய் கிருஷ்ணனுற்கூறப்பட்டது. இதனுல் கலிபிரவேசிக்கச் சின்னுட்களுக்கு முன்தான் கிருஷ்ணனை அழைக்கவந்ததாயும் பிறகு பட்டணம் முழுகியதாயும் உடனே பகவானின்யாத்திரை என்றும் வெளியாயிற்று.

(தொடரும்.)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

## மதிப்புரை.

ஸ்ரீ தக்ஷிணமூர்த்திப்பதிகமும் மாலையும்,

இப்பெயர்கொண்ட சிறு புஸ்தகம் நமது பார்வைக்கு வந்துளது

இதில் புதுவையைச்சார்ந்த லாஸ்பேட்டைத் துரைத்தனப்பாடசாலைத் தமிழ் உபாத்தியாயர் ஸ்ரீ சுப்பையாப்பத்தரால் இயற்றப் பட்ட பாக்கள். கல்லால் விளங்கும் கடவுளாகிய ஸ்ரீ குருமூர்த்தியைப் பக்தியுடன் துதிப்பனவாக அமர்ந்துள்ளன.

இவர் தம்வாக்கைக் கண்ட துறைகளில் வீணுகச்செலவிடாமல் கடவுளிடம் ஸமர்ப்பணம் செய்து தாமும் அடியாராக இருக்கிறுர் என்பதை இதினுலறிந்து சந்தோஷப்படுகிறேம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.